சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 38/2009

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 6 lw – 7 | நாள் | 13.11.2024 |
| பெயர் | செந்தில் குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | சம்பந்தம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1ம் எதிரி ஆஜர் இல்லை. மற்ற எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரின்மை காரணமாக எதிரி தரப்பு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் பூம்புகார் மெயின்ரோட்டில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். பூம்புகார் தர்மகுளத்தில் ஆயில் மற்றும் சிமெண்ட் கடை வைத்து சுமார் 20 வருடங்களாக நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டு கையெழுத்துகளும் என்னுடையது இல்லை. தருமு மகன் பாண்டியன் பக்கத்து ஊரை சேர்ந்தவர் அவர் எனக்கு பழக்கம் தான். அவர் எப்போதாவது கடைக்கு வந்து பேசிக்கொண்டிருப்பார். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

10.06.2007 அன்று இரவு 09.30 மணிக்கு கடை மூடும் நேரத்தில் பாண்டியன் என் கடைக்கு வந்து பேசிக்கொண்டிருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. மயிலாடுதுறை பூம்புகார் மெயின்ரோட்டில் எனது கடை உள்ளது என்றால் சரி. அந்த ரோட்டில் இரண்டு பக்கமும் கடைகள் உள்ளது என்றால் சரி. எனது கடைக்கு எதிரே பூம்புகார் ஜவுளிக்கடை உள்ளது என்றால் சரி. அதற்கு பக்கத்தில் மகாவீர் பைனான்ஸ், துர்கா எலக்ட்ரிக் கடை, ரமேஷ் டெய்லர் கடை, டாஸ்மாக் கடை உள்ளது என்றால் சரி. அதற்கு நேர் எதிரில் முருகன் ஸ்டுடியோ உள்ளது என்றால் சரி. பக்கத்தில் பக்தவத்சலம் காலிமனை, ரமேஷ் கில்ட் கடை, மற்றும் என் கடையான செண்பகசோழன் ஆயில் கடை, பக்தவத்சலம் ஜவுளிக்கடை

வெங்கடேஷ் பேன்ஸி ஸ்டோர் ஆகியவை வரிசையாக உள்ளது என்றாலும் பக்தவத்சலம் ஜவுளிக்கடை அருகில் மின்கம்பமும் அதற்கு மேற்கில் தர்மகுளம் அக்ரஹாரம் செல்லும் தார் சாலையும் உள்ளது என்றால் சரி. சம்பவத்தை பற்றி நான் கேள்விப்படவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தின்போது நான் ஊரில் இல்லை. 10.06.2007 அன்று இரவு 21.30 மணியளவில் பூம்புகார் காவல் நிலைய குற்ற எண். 123/2007 வழக்கு சம்பந்தமாக வழக்கின் சம்பவ இடமான தர்மகுளம் கிராமம் பூம்புகார் to மயிலாடுதுறை சாலையில் உள்ள பூம்புகார் ஜவுளிக்கடை எதிரில் என் முன்பாகவும் பாண்டியன் முன்பாகவும் பூம்புகார் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றாலும் அதற்கு நான் சாட்சி கையெழுத்து செய்து விட்டு போலிஸ் விசாரணையிலும் மேற்படி விவரங்களை கூறிவிட்டு தற்போது அதிலிருந்து முரண்பட்ட நிலையில் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணைஇல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.